**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 121/2019** | | |
| **PW/DW/CW** | : | **PW4** | | |
| **Name** | : | காசிமாயன் | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused absent petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.08.2024

---

**முதல் விசாரணை**

நான் உசிலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.11.2017ம் தேதி மதுரை ஆரப்பாளையம் பேருந்து நிலையத்திலிருந்து பகல் 12.50 மணிக்கு பேருந்தை ஓட்டி கொண்டு உசிலம்பட்டிக்கு வந்து கொண்டிருந்தபோது அன்றைய தினம் எம்ஜிஆர் நூற்றாண்டு விழா தேனியில் நடைபெற்ற காரணத்தின் முன்னிட்டு போக்குவரத்து நெரிசல்இருந்ததால் 2.10 மணியளவில் உசிலம்பட்டியை அடைந்தபோது மலையாண்டி தியேட்டரை அடுத்து பேருந்து மெதுவாக ஊர்ந்து காளியம்மன் கோவில் அருகே வந்தபோது பேருந்தின் இடது பக்கம் மூன்று பெண்கள் நடந்து சென்ற போது கிழக்கிலிருந்து மேற்காக வந்த இருசக்கர வாகனத்தில் வந்த எதிரி நடந்து சென்ற பெண்கள் மீது மோதிவிட்டார். இரண்டு பெண்கள் கீழே உட்கார்ந்துவிட்டார்கள். ஒரு பெண் காலை பிடித்து கொண்டு ஐய்யோ என்று உட்கார்ந்துவிட்டார். எதிரியின் பின்னால் இருசக்கர வாகனத்தில் இருந்த எதிரியின் மனைவி மல்லாந்தபடி ரோட்டில் விழுந்துவிட்டார். எதிரியும் கீழே விழுந்துவிட்டார். நான் பேருந்திலிருந்து இறங்கி நானும் நடத்துனரும் பார்த்தபோது எதிரி நிதானம் இல்லாமல் இருந்தார். எதிரியின் மனைவிக்கு தலையில் அடிப்பட்டிருந்தது. அடிப்பட்ட எதிரியின் மனைவியையும் காயம்பட்ட பெண்ணையும் ஆட்டோவில் ஏற்றி அனுப்பி வைக்க உதவியாக இருந்தோம். எதிரியின் மனைவி மூன்று நாட்கள் கழித்து இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

TN 58 N 2152 என்ற அரசு பேருந்தை தான் அன்றைய தினம் நான் ஓட்டினேன். என் மீது காயம்பட்ட பொன்மலர்

என்பவர் காவல் நிலையத்தில்புகார் கொடுத்து குற்ற எண் 960/2017 பிரிவு 279,337 ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நாங்கள் வரும்போது ரோட்டில் கூட்டமாக இருந்தது. நான் நகட்டி நகட்டி கொண்டே பேருந்தை ஓட்டிவந்தேன். அந்த கூட்டத்தில் நிறைய பெண்கள் கலந்துகொண்டார்கள். மலையாண்டி தியேட்டர் மேற்கே காளியம்மன் கோவில் பக்கத்தில் வரும் போது எதிரியின் மனைவி கீழே விழுவதை பார்த்தேன். நடந்து சென்ற பெண்கள் மீது இருசக்கர வாகனம் மோதுவதை பார்த்தேன். மண் ரோட்டில் சம்பவம் நடந்தது எதிரியின் மனைவி தார் ரோட்டில் விழுவிட்டார். மண் ரோட்டில் காயம்பட்ட இருவரும் செல்லும்போது எதிரி மோதி உள்ளார். அன்றைய தினம் கூட்டத்தில் எந்த வாகனமும் வேகமாக செல்ல முடியாது என்றால் சரிதான். நான் ஹாரன் அடிக்காமல் மெதுவாக பேருந்தை ஓட்டினேன். எனது பேருந்திற்கு முன்பாக சுமார் 1 0 அடி தூரத்திற்குள் இறந்தவர் விழுந்தார். காயம்பட்டவர்களை வாகனம் எப்படி தட்டி விழுந்தார்கள் என்ற விபரம் தெரியாது அவர்களுக்கு அடிப்பட்ட விபரம் தெரியும். இவர்களை தவிர வேறு யாருக்கும் காயம் ஏற்படவில்லை. போலீசார்கள் அந்த இடத்தில் இருந்ததால் நாங்கள் தகவல் சொல்லவில்லை. என் மீது புகார் கொடுத்ததால் போலீசார் விசாரித்தார்கள். அந்த வழக்கில் விசாரணைக்காக சென்றபோது நான் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் நான் வாய்மொழியாக சொன்னேன் எழுதி கொடுக்கவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன இடத்தில் எனது வாகனத்தை ஓட்டி சென்றபோது சொன்ன முறையில் விபத்து எதுவும் நடக்கவில்லை என்றும் காயம்பட் ட அ.சா 1 என் மீது புகார் கொடுத்துவிட்டதாலும் நான் எதிரி ஓட்டி இருசக்கர வாகனத்தில் எனது வாகனத்தை ஓட்டி சென்று எதிரியின் வாகனத்தில் நான் இடித்துவிட்டதால் அவரும் அவரது மனைவியும் நான் இடித்ததால் அவர்கள் வாகனம் உழுட்டப்பட்டு அவர்களுக்கு கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றும் பொன்மலர் கொடுத்த புகாருக்காக நான் நிலையத்தில் ஆஜராகி என் செல்வாக்கை பயன்படுத்தி என் மீது போட்ட வழக்கை எதிரி தவறு செய்ததாக அவர் மீது போடப்பட்டு என்னை காப்பாற்றி கொள்வதற்காக அவர் மீது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. S.d./Kasimayan

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.